ASSOCIATION OF SCIENCE, TECHNOLOGY & INNOVATION

# 2020: The Lost Year for Education Report Launching

செய்தி வெளியீடு

பெட்டாலிங் ஜெயா, ஜனவரி 20: அறிவியல் தொழிநுட்ப மற்றும் புத்தாக்க இயக்கம் (ASTI) இணையதளக் கற்றல் எவ்வாறு மாணவர்களின் வாழ்க்கையையும் கற்றலையும் பாதிக்கிறது என்பது குறித்த தனது கணக்கெடுப்பின் அடிப்படையில் ஒரு அறிக்கையை அதிகாரப்பூர்வமாக அறிமுகப்படுத்துகிறது.

இந்த ஆய்வு 2020-இல் குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய சமூகங்கள் மற்றும் மலேசியாவில் உள்ள B40 குடும்பங்கள் மத்தியில் இணையதளக் கற்றல் ஏன் பயனுள்ளதாக இல்லை என்பதற்கான ஒரு நுண்ணறிவை வழங்குகிறது. கடந்த ஆண்டு இறுதியில் நடத்தப்பட்ட இந்த ஆய்வில் கோலாலம்பூர் மற்றும் எட்டு மாநிலங்களிலிருந்து மொத்தம் 120 ஆசிரியர்கள் பங்கேற்றனர்.இந்த ஆசிரியர்கள் ASTI-இன் மிக நீண்ட காலமாக நடத்தப்படும் இளம் ஆய்வாளர்களின் அறிவியல் விழாவின் பங்களிப்பாளர்கள் மற்றும் பங்கேற்பாளர்கள் ஆவர். இணையம் வாயிலாக நடத்தப்பட்ட இந்த கணக்கெடுப்பு கிராமப்புற மற்றும் நகர்ப்புற அரசு பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களை சென்றடைந்தது, அவர்களில் பெரும்பாலோர் கிராமப்புறங்களில் கற்பிக்கின்றனர், அங்கு பெரும்பாலான மாணவர்கள் B40 சமூகங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

மொபைல்/ தொழிநுட்ப சாதனங்களின் பற்றாக்குறை மற்றும் மாணவர்களுக்கு இணைய அணுகல் பட்டியலில் முதன்மை வகிக்கிறது.

கோவிட்-19 தொற்று நோய் உலகம் முழுவதும் கடுமையான பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது, மலேசியாவும் இதற்கு விதிவிலக்கல்ல. சில துறைகள் தப்பிப்பிழைக்க முடிந்தது, மற்ற துறைகள் மூடப்படுகின்றன அல்லது நிறந்தரமாக நிறுத்துவதற்கு வந்துவிட்டன. கல்வி, சமரசம் செய்ய முடியாத ஒரு முக்கியமான அத்தியாவசிய சேவைத் துறையாகும். இருப்பினும், கோவிட்-19 தொற்று நோயினால் பள்ளிகள் மூடப்படும் என்பதை நாம் யாரும் நினைத்திருக்க மாட்டோம்.

2021-ஆம் ஆண்டில் கல்வித் தளங்களை நாம் அனைவரும் எவ்வாறு மறுசீரமைக்கலாம் மற்றும் மறுதொடக்கம் செய்யலாம் என்பதைப் புரிந்துகொள்வதற்காக ASTI இந்த கணக்கெடுப்பைத் தொடங்கியது. இந்த கணக்கெடுப்பின் அடிப்படையில், முதலாவது முந்தைய பள்ளி ஆண்டு பாடத்திட்டத்தை 2021-ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் மீள்பார்வை செய்வதாகும். மேலும், தேவைப்படும் மாணவர்களுக்கு மீள்பார்வை மற்றும் குறைநீக்கல் வகுப்புக்கள் நடத்துவதும் இதில் அடங்கும். பின்பு இணையதள கற்றல் சிறப்பாக நடைப்பெற, உள்கட்டமைப்பு திறம்பட செயல்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.

நாட்டின் எதிர்காலத்தை தங்கள் கரங்களில் வைத்திருக்கும் நம் மாணவர்களுக்கு உதவ ஒரு தேசமாக நாம் ஒன்றிணைய முடியும் என்று ஆஸ்தியின் நம்பிக்கை தெரிவிக்கிறது. ஆகவே, நிகழ்காலத்தை ஒரு அர்த்தமுள்ளதாக்குவதன் மூலம், நமது எதிர்காலத்திற்கு நம் கவனத்தை செலுத்துவோம்.

இந்த ஆய்வின் அறிக்கையை இத்துடன் இணைக்கிறோம், மேலும் நீங்கள் இந்த அறிக்கையையும் https://www.asti.org.my/recoveryprojects/ என்ற இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். மேல்விபரங்களுக்கு, asti2510@gmail.com என்ற மின்னஞ்சலில் அல்லது 014-7124217 என்ற எண்ணில் எங்களை அணுகலாம்.